அரசுப் பள்ளிகளில் உயர்தொழில் நுட்ப ஆய்வகங்களைத் தரம் உயர்த்துதல்! கலைத் திருவிழா விரிவாக்கம்!

# தமிழ்நாட்டில் 22,931 பள்ளிகளில் “ஸ்மார்ட் வகுப்புகள்”!

## பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கையில் 25 அறிவிப்புகளை வெளியிட்டு - அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பதிலுரை!

**சென்னை, ஜூன் 26 -**

**அரசுப் பள்ளிகளில் உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள் தரம் உயர்த்துதல், கலைத் திருவிழா தொடக்கப் பள்ளிகளுக்கு விரிவாக்கம், தமிழ்நாட்டில் 22,931 பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்புகள் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என்று பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையில் 25 அறிவிப்புகளை வெளியிட்டு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பதிலுரையாற்றும் போது குறிப்பிட்டார்.**

பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கை மீதான அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியின் பதிலுரை வருமாறு:

கதிர் அருவாளால் அறுவடை செய்து, ஏணி ஏறி தோரணம் கட்டி, பானைக்கு புது வர்ணம் பூசி, அரிவாள் சுத்தியால் கரும்பை வெட்டி, வெல்லம் உடைத்து, தீப்பெட்டியால் தீ மூட்டி, கைகளால் அரிசியிட்டு, திராவிடத்தின் வெற்றியை ஒட்டுமொத்தமாக நம்முடைய உதயசூரியனுக்கு பொங்க வைத்திருக்கின்ற எங்களுடைய வாக்காள பெருமக்களுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**இன்றும் எங்களை வழி நடத்தும் கலைஞர்!**

எரிமலையாய், சுடுதழலாய், இயற்கைகூத்தாய், எதிரிகளை நடுங்க வைக்கும் இடியொளியாய், இன உணர்வு தீப்பந்த பேரொளியாய், இழிவுகளை ஒழித்துக்கட்டும் கொடுவாளாய், இறைவனுக்கே மறுப்பு சொன்ன இங்கர்சாலாய்

எப்போதும் பேசுகின்ற ஏதென்ஸ் நகர சாக்ரடீஸாய்; ஏன் என்று கேட்பதில் வைர நெஞ்ச வோல்டயராய் (Voltaire); ‘என் தந்தைப் பெரியாரும் வாழ்ந்திட்டார்’ என்று

**“மு.க.ஸ்டாலின் காலை உணவு திட்டம்” என பெயர் வைக்க வேண்டும்!**

பெரியார் புகழுரைத்த எங்களுடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) ‘வாழ்வு’ என்ற மூன்றெழுத்து தொடங்கி, நம்மையெல்லாம் வெற்றிக்கு அழைத்துச் செல்லும் ‘அண்ணா’ என்கின்ற மூன்றெழுத்து சொல்லி, அண்ணா புகழுரைத்து, அண்ணா சொன்ன ‘படி’ என்கின்ற அந்த பேச்சை மட்டும் கேட்காமல், பிறகு வாழ்ந்த காலம் முழுவதும் அண்ணா தவிர்த்து, வேறு எந்தப் பேச்சும் பேசாமல் வாழ்ந்த எங்களுடைய டாக்டர் கலைஞர் அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) உடன்பிறப்புகள் எத்தனை உயரத்திற்குச் சென்றாலும், எப்படிப்பட்ட விமர்சனங்கள் வந்தாலும், அவருடைய கருத்தாக ‘நெட்டையானவர் குட்டையான வாசப்படியில் குனிந்து செல்லவில்லையென்றால் நெத்தி அடி நிச்சயம்’ என்கின்ற கருத்தாக இருந்தாலும், ‘ஏவி விட்டோர் மகிழ்ந்து நின்றாலும், அந்த சின்ன தம்பியினுடைய மார்பிலே தானே குத்துகிறான்; அதனால் எனக்குப் பெருமை’ என்று சொன்ன கலைஞர் அவர்கள் இன்றும் எங்களை மேன்மைப்படுத்தி வழிநடத்திக் கொண்டிருக்கிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே! மூன்றுமுறை மானியக் கோரிக்கைளில் பதிலுரையாற்றுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருந்தேன்; இது நான்காவது முறை. உங்களுடைய நூற்றாண்டு நிறைவடைந்த இந்த ஆண்டில், என்னுடைய இந்தப் பதிலுரையை முழுமையாக உங்களுக்குக் காணிக்கையாக்குகிறேன். உங்களுக்கு காணிக்கையாக்குவது என்பது ஒட்டுமொத்த தமிழினத்திற்கு காணிக்கையாக்குவது என்ற பெருமையோடு இதைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களே! சமச்சீர் பாடத்திட்டத்தை நீங்கள்தான் கொண்டு வந்தீர்கள்; தமிழ் கட்டாய பாடம் என்கின்ற அந்தச் சட்டத்தை கொண்டு வந்தவர் நீங்கள்; பள்ளிகளிலே கட்டணம் அதிகமாக வசூலிக்கப்படுகிறது என்று சொல்லியபோது, அதை ஒழுங்கப்படுத்த நடவடிக்கை எடுத்தவர் நீங்கள்; சத்துணவு என்று வரும்போது, அது உண்மையான சத்துணவாக இருக்க வேண்டுமென்று, முட்டை வழங்கியவர் நீங்கள்; பள்ளிக்கூடத்திலே சான்றிதழ் பெறலாம் என்கின்ற திட்டத்தைக் கொண்டு வந்தவர்கள் நீங்கள்; விலையில்லா பாட நூல்களை வழங்கியவர் நீங்கள். ஏன்? நமது பாடநூல் கழகத்தை உருவாக்கியவரும் நீங்கள்; அண்ணா நூற்றாண்டு நூலகத்தைக் கொண்டு வந்தவர் நீங்கள்.

**நிலை நிறுத்திக் காட்டிய திராவிட கையிருப்பு!**

நீங்கள் எங்கே விட்டு சென்றீர்களோ, அந்த இடத்திலிருந்து எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் பயணத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். கல்வி என்பதை எடுத்துக்கொண்டால், அப்போதைய நீதிக் கட்சி முதல் தற்போதைய திராவிட மாடல் அரசு வரைக்கும் பல்வேறு சவால்களை, இன்னல்களைத் தாண்டி தான் வந்துகொண்டிருக்கிறோம். அதை இந்தக் காலக்கட்டத்தில் நிலைநிறுத்தி காட்டக்கூடியவர் யார்? குறிப்பாக ஒரு வயதானவருடைய பேரன் இன்றைக்கு ஓர் அரசு அலுவலராக; சேற்றிலே கால் வைத்து நாற்று நட்டு கொண்டிருக்கும் பெண்மணியின் மகள் இன்றைக்கு மருத்துவ மாணவியாக; கொஞ்சம் மழை பெய்தாலே ஒழுகுகின்ற வீட்டிலிருந்து படித்து வந்த இளைஞன், இன்றைக்கு அதேப் பகுதியிலே மிகப் பெரிய கட்டடப் பொறியாளனாக; சாக்கடை அடைப்பட்டிருந்தால், அந்த சாக்கடையிலே இறங்கி அதனை சுத்தம் செய்பவருடைய மகன், இன்றைக்கு நகராட்சி ஆணையராக; எழுதப் படிக்கக்கூட மிகவும் சிரமப்படும் பெற்றோர்களின் மகன் ஒரு பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக; எந்தச் சாதியைச் சார்ந்தவர்களை கோயிலுக்குள் செல்ல அனுமதிக்க மறுத்தார்களோ, அந்தச் சாதியிலிருந்து வந்தவர் இந்து சமய அறநிலையத் துறையில் ஓர் அதிகாரியாக; ஜமீன்தாரின் பண்ணையில் வேலை பார்க்கின்ற ஒரு பண்ணையாளனின் மகன், அதே பகுதியினுடைய ஜில்லா Collector-ஆக; போக்குவரத்து வசதியே இல்லாத இடத்திலிருந்து வந்து படித்த ஓர் இளைஞன், போக்குவரத்துத் துறை ஆய்வாளராக; எந்தச் சாதியினர் குனிந்தே இருக்க வேண்டுமென்று சொன்னார்களோ, அந்தச் சாதியிலிருந்து வந்து, காக்கிச் சட்டை, காக்கி பேண்ட் போட்டுக் கொண்டு, எதிர்த்து நின்று, நெஞ்சை நிமிர்த்துக் கொண்டிருக்கக்கூடிய உயர் போலீஸ் அதிகாரியாக; கைநாட்டாக இருக்கின்ற பெற்றோர்களின் மகன் இன்றைக்கு வெளிநாட்டில் IT கம்பெனியில் சம்பாதிக்கக்கூடியவராக இருக்கின்றார்கள். இதற்கெல்லாம் யார் காரணம்? இன்றைக்கும் சமூக நீதியை, இட ஒதுக்கீட்டினை நிலைநிறுத்தக்கூடிய திராவிட கையிருப்பு யார்? இந்தப் பெயரை தமிழினம் என்றும் சொல்லும்; தமிழினம் நன்றி மறவாத இனம். நன்றியுணர்ச்சி என்பது இருக்கும் வரைக்கும் இந்தப் பெயரை இப்படியெல்லாம் சொல்வார்கள்; மு.க. ஸ்டாலின்; முதலமைச்சர் ஸ்டாலின்; முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்று. (மேசையைத் தட்டும் ஒலி) எனது அரசியல் ஆசான், தமிழக முதலமைச்சர் அவர்களை நான் வணங்குகின்றேன்.

இந்த நன்றியோடு எங்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், நான் எனது துறையின் சார்பாக பல்வேறு பள்ளிக்கூடங்களுக்கு நேரடியாகச் சென்று ஆய்வு மேற்கொள்ளும்போது, அவர் துறை சார்ந்து எந்த மாவட்டத்திற்குச் சென்றாலும், மறக்காமல் செல்வது பள்ளிக்கூடமே! அங்கே பள்ளிக் குழந்தைகளோடு உட்கார்ந்து, அவர்களோடு காலை உணவை உண்டு, பள்ளியில் assembly கூடும்போது, அவர்களிடம் தன்னம்பிக்கையூட்டுகிற அளவிற்கு உரையாடிக் கொண்டு வரக்கூடிய எங்களுடைய அமைச்சர்; நாளை எங்களை வழிநடத்தக்கூடியவர். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் எங்களிடம் அடிக்கடி சொல்லக்கூடியது ஒன்றே ஒன்றுதான். என்னதான் இருந்தாலும், உங்களுடைய பள்ளிக் கல்வித் துறைக்குதான் அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எங்கள் துறைக்கு அதைவிட குறைந்த நிதிதான் ஒதுக்கப்படுகிறது என்று அடிக்கடி சொல்வார்கள். அதிலிருந்து ஒன்றை மட்டும், முதலமைச்சர் அவர்களின் எண்ணம் என்னவென்பதைப் பற்றி நான் தெளிவாகச் சொல்கிறேன்; மகனுடைய துறையேயானாலும், மாநில வளர்ச்சிக்கு பள்ளிக்கூடம்தான் அடித்தளம் அமைக்கும் என்பதற்காகத்தான் 44 ஆயிரத்து 42 கோடி ரூபாயை எங்களுடைய துறைக்கு ஒதுக்கி தந்திருக்கின்றார்கள். அதற்கு எங்களுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியினுடைய உறுப்பினரான நீங்கள், உங்களுடைய சொந்த நிதி பங்களிப்பின் மூலமாக ஏறத்தாழ 300 பள்ளிகளுக்கு smart வகுப்புகளை அமைத்துக் கொடுத்து, ஒட்டுமொத்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டு சட்டமன்ற உறுப்பினராக விளங்குவதற்காக முதலில் துறையின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, Zone அளவில், மண்டல அளவில் என்னுடைய ஆய்வுகளை நான் மேற்கொண்டிருக்கிறேன். பிறகு மாவட்ட அளவில், இன்றைக்கு ஏறத்தாழ 234 தொகுதிகளில் 138 தொகுதிகளுக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்தவன் என்ற முறையில் நான் சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுங்கட்சியைச் சார்ந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சியைச் சார்ந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், ஏன், எதிர்க்கட்சியைச் சார்ந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களும் அவர்களுடைய பங்கிற்கு பள்ளிக்கூடத்திற்கென்று பல்வேறு நிகழ்வுகளைச் செய்திருக்கிறார்கள். அதற்கு இந்த மன்றத்திலிருந்து என்னுடைய நன்றியைத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



குறிப்பாக, அவையினுடைய முன்னவர் அண்ணன் அவர்களுக்கும், அதே போன்று எங்களுடைய மாவட்ட அமைச்சர், எங்களுடைய மணப்பாறை தொகுதியில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு இன்றைக்கு நிதி ஒதுக்கி தந்திருக்கிற அவர்களுக்கும், எனக்கு உறுதுணையாக இருக்கிற அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உரையாற்றியிருக்கின்றவர்கள், குறிப்பாக, பள்ளிக் கல்வித் துறை மானியம் என்று வரும்போது, இதுவரைக்கும், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட கடந்த மூன்றாண்டுகளாக கிட்டத்தட்ட 2,641 கோப்புகள் எனக்கு வந்திருக்கின்றன. 2,641 கோப்புகளுக்கும் நான் கையெழுத்திட்டிருக்கிறேன்.

**செயல்படுத்தியுள்ள 143 அறிவிப்புகள்!**

அதுமட்டுமல்ல, அறிவிப்புகள். தேர்தல் வாக்குறுதிகளிலிருந்து, விதி 110-ன்கீழ், நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்புகளாக இருந்தாலும் சரி, அது செய்தி வெளியீடாக இருந்தாலும் சரி, சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சர் என்கிற முறையில் என்னுடைய அறிவிப்பாக இருந்தாலும் சரி, இப்படி ஒவ்வொன்றும் ஆளுநர் உரையில் வந்தது, நிதிநிலை அறிக்கையில் வந்தது என ஏறத்தாழ 158 அறிவிப்புகளில், இதுவரைக்கும் 143 அறிவிப்புகளை நாங்கள் செயல்படுத்தியிருக்கின்றோம். வருங்காலத்தில், மீதமிருக்கின்ற 15 அறிவிப்புகளையும் உடனடியாக நாங்கள் செய்து காட்டுவோம்.

வெட்டுத் தீர்மானங்களாக ஏறத்தாழ 138 வெட்டுத் தீர்மானங்களை வகைப்படுத்தினால் 43 வெட்டுத் தீர்மானங்கள் வருகின்றன. இன்று, உரையாற்றியிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் அந்த வெட்டுத் தீர்மானத்தைத் தொட்டும் உரையாற்றியிருக்கிறார்கள். கம்பம்

நா. இராமகிருஷ்ணன், தாயகம் கவி, மு.பெ. கிரி, சா. மாங்குடி, ஜி.கே. மணி, ஜெ. முகம்மது ஷாநவாஸ் ஆகிய ஒவ்வொருவருமே இன்றைக்கு வெட்டுத் தீர்மானத்தைத் தொட்டு பேசியிருக்கிறார்கள். இன்று, நிறைவாகப் பேசிய காரப்பாக்கம் க. கணபதி அண்ணன் அவர்கள்கூட என்னுடைய பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்து பாராட்டுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படி பாராட்டுகளைத் தெரிவித்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் ஒன்றே ஒன்றை சொல்வேன். இந்த அன்பில் மகேஸ் பொய்யாமொழி நிற்கின்ற இடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தை சார்ந்திருக்கின்ற எந்த சட்டமன்ற உறுப்பினர் நின்றிருந்தாலும் ஏன்? என்னைக் காட்டிலும் இன்னும் சிறப்பாக அதைச் செய்திருப்பார்கள். ஏனென்றால், அப்போதும் இந்தத் துறையை வழிநடத்தப் போவது தமிழ்நாடு முதலமைச்சர்தான் என்கிற அந்தப் பெருமை. (மேசையைத் தட்டும் ஒலி)

**தேசிய அளவில் பதக்கங்கள்!**

அதேபோன்று, வேண்டுதலாகவும், கோரிக்கைகளாகவும் இங்கே எதிரே அமர்ந்திருப்பவர்களெல்லாம் இன்றைக்கு பல்வேறு கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக, கம்பம் நா. இராமகிருஷ்ணன் அண்ணன் அவர்கள் பேசும்போது, விளையாட்டுத் துறையும், பள்ளிக் கல்வித் துறையும் எப்படி இருக்க வேண்டுமென்பதை எடுத்து மிக அழகாகச் சொன்னார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இப்போது SGFI games நடைபெற்றிருக்கிறது. தேசிய அளவில், பள்ளிக்கூட அளவில் முடிந்ததற்குப் பிறகு, தேசிய அளவில் செல்லும்போதுகூட இன்றைக்கு எங்களுடைய பள்ளி மாணவர்கள் ஏறத்தாழ 95 Gold medals, 112 Silver medals, 212 வெண்கலப் பதக்கங்களை நாங்கள் வென்று வந்திருக்கிறோம். ஆக, அவர்களுக்கான பாராட்டுகளாகவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே நடத்தி காட்டியிருக்கிறார்கள் என்பது எங்களுக்கான பெருமை.

Upgradation-ஐப் பற்றி இன்று நிறைய உறுப்பினர்கள் கேட்கிறீர்கள். உண்மைதான். நிறைய பேருடைய கோரிக்கைகளும் அதுவாகத்தான் இருக்கும். அதில் ஒன்றே ஒன்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். கடந்தகால ஆட்சியில், 525 பள்ளிகளை upgrade செய்திருக்கிறார்கள் என்று CAG report-ல் சொல்லியிருக்கிறார்கள். அந்த 525 பள்ளிகளில், 513 பள்ளிகள் அதாவது விதிமுறையே இல்லாத பள்ளிகளை upgrade செய்திருக்கிறார்கள். Upgrade செய்தது மட்டுமல்ல, கிட்டத்தட்ட 364 பள்ளிகளுக்கு infrastructure செய்து கொடுக்காமல் சென்றுவிட்டார்கள். இப்போது அதையும் சேர்த்து செய்ய வேண்டிய ஒரு கட்டாயத்தில் நாம் செய்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும், உறுப்பினர்கள் வைக்கின்ற கோரிக்கைகளை வகைப்படுத்தி, எது எதற்கெல்லாம் தேவையோ, அது கண்டிப்பாக upgradation ஆக இருந்தாலும் சரி, சிலர் bifurcation பற்றியும் கேட்டிருக்கிறார்கள். உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், அமைச்சர் மஸ்தான் அவர்கள், K. மாரிமுத்து அண்ணன் அவர்கள், நேற்று பேசிய அரவிந்த் ரமேஷ் அண்ணன் அவர்கள் எல்லோருமே bifurcation பற்றி கேட்டிருக்கிறார்கள். அந்த bifurcation-க்குத் தேவையான விதிமுறைகள் வருகின்றபட்சத்தில், கண்டிப்பாக, அதையும் நாங்கள் செய்து தருவோம் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படித் துறை சார்ந்து வெட்டுத் தீர்மானங்கள் என்று வரும்போது, ஒவ்வொருவரும், அதாவது சேலம் மாவட்டத்தைச் சார்ந்திருப்பவர்கள், திருவள்ளூர் மாவட்டத்தைச் சார்ந்திருப்பவர்கள், நம்முடைய திருத்துறைப்பூண்டி தொகுதியைச் சார்ந்திருக்கிற அன்பு சகோதரர் கே.மாரிமுத்து ஆகியோர் நிறைய building வேண்டுமென்று கேட்கிறார்கள்.

**மாணவர்கள் சேர்க்கை குறைவு என்பது தவறு!**

குறிப்பாக, DEO office எங்களுக்குத் தேவைப்படுகிறது. பொதுவாக, CEO office தேவைப்படுகிறது என்கிறார்கள். திருவண்ணாமலைக்கு CEO office வேண்டுமென்று வெட்டுத் தீர்மானத்தில் கேட்டிருக்கிறார். ஏற்கெனவே, அது முடிவடைந்திருக்கிறது. மிக விரைவில், அந்த அலுவலகத்தை நாங்கள் திறக்கவிருக்கிறோம். ஆக, இந்தமாதிரியான கட்டடங்கள், ஏற்கெனவே, எங்ளுடைய துறையினுடைய Principal Secretary மூலமாக circular கொடுத்திருக்கிறோம். எந்தெந்த பள்ளிக்கூடங்களில் DEO office, CEO office செயல்பட்டுக்கொண்டிருக்கிறதோ உடனடியாக அங்கிருந்து காலி செய்துவிட்டு, rental basis-ல், வெளியில் சென்று உங்களுடைய அலுவலகத்தை வையுங்கள். அது மாணவர்கள் அமர்ந்து படிக்கக்கூடிய இடம் என்று நாங்கள் circular கொடுத்திருக்கிறோம். மிக விரைவில் அதையும் நாங்கள்- ஏனென்றால், இன்றைக்கு ஜி.கே. மணி அவர்கள் சொன்னதுமாதிரி நமக்கு நிறைய- அரசுப் பள்ளிகளில் சேருகிற மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது தவறானது. ஏறத்தாழ இந்த ஆண்டு மட்டும் பார்த்தீர்களென்றால், 3 இலட்சத்து 37 ஆயிரத்து 564 மாணவர்கள் இன்றைக்கு அரசுப் பள்ளிகளில் சேர்ந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஆண்டு மார்ச் 1 ஆம் தேதிதான் மாணவர்கள் சேர்க்கையை நாங்கள் ஆரம்பித்து வைத்தோம். அவர்கள் சொல்வதைப் போல, இந்தத் துறை என்பது வருவாய்

**உயர்கல்வி நிறுவனங்களில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களின் கல்விச் செலவினை ஏற்றல்!**

ஈட்டாத துறை. உண்மைதான். பல அமைச்சர்கள் எங்களோடு தொடர்பு கொண்டு, இன்றைக்கு எங்களுடைய துறை மேம்படுவதற்கு அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆமாம். எங்களுடைய துறை வருவாய் ஈட்டாத துறைதான். பெஞ்சமின் பிராங்கிளின் சொல்வதைப்போல, இதில் செய்கின்ற முதலீடு என்பது மனிதவளத்தின்மீது நீங்கள் செய்கின்ற முதலீடு.

இது அறிவாற்றல் மீது செய்கின்ற மூலதனம். இதனுடைய வட்டி என்பது வளர்ச்சியாகவும், முன்னேற்றமாகவும் இருக்குமென்று சொல்லியிருக்கிறார். அதைக் கண்டிப்பாக எங்களுடைய துறை சார்ந்து அதை நாங்கள் தொடர்ந்து செய்துகொண்டிருக்கின்றோம். கிட்டத்தட்ட இந்த 3 வருடத்தில் 67-க்கும் மேற்பட்ட திட்டங்களை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம்.

**கலைஞர் நூற்றாண்டு நூலகம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை!**

ஒவ்வொரு திட்டத்தையும் சொன்னால் நமக்கு time இருக்காது. இருந்தாலும், கடந்த ஆண்டில் முக்கியமாக முத்தாய்ப்பாக இருப்பது நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய பெயரில் இருக்கின்ற கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை நாம் மதுரையிலே தொடங்கி வைத்திருக்கின்றோம். அதில் இன்றைக்கு காலை வரைக்கும் வந்து சென்றவர்கள், அதைப் பயன்படுத்தியவர்கள் எண்ணிக்கை 9 இலட்சத்து 65 பேர்; ஒரு நாளைக்கு ஏறக்குறைய 2,670 பேர் அதனை பயன்படுத்துகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாக, அங்கே பணியாற்றக்கூடிய ஒரு auto ஓட்டுனருடைய மகன் ஸ்ரீகாந்த் என்பவர் இரண்டு கண்களும் தெரியாத அந்த மாணவன் அங்கே போட்டித் தேர்வுகளுக்காக அந்த நூலகத்தை பயன்படுத்திக் கொண்டு இன்றைக்கு தனியார் bank-ல் Assistant GM ஆக அவருக்கு வேலை கிடைத்திருக்கிறது என்று சொல்லும்பொழுது அவர் அதை பெருமையாகச் சொல்கிறார். அவர் சொல்லும்போது இந்த நூலகம் மட்டுமல்ல; இங்கு வேலை பார்ப்பவர்கள்கூட எங்களை நன்றாகப் பார்த்துக்கொள்கிறார்கள் என்று சொல்லும்போது கண் இல்லையே என்று அவர் கலங்கவேண்டாம்; கண்ணாக கலைஞர் அவர்கள் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்பதை அந்தத் தம்பி நினைத்தால் போதும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி ஒவ்வொருவரும் போட்டித்தேர்வு என்று வருகின்றபொழுது, அதுமட்டுமல்ல நூலகம் சார்ந்து இன்றைக்கு பல்வேறு கார்மேகனார் என்ற பெயரில் நூலகத்தை கொண்டுவந்திருக்கிறோம். S.R. அரங்கநாதன் பெயரில் நாங்கள் நூலகத்தை கொண்டுவந்திருக்கிறோம். தேர்தல் வாக்குறுதியில் சொன்னதுமாதிரி, ஏறத்தாழ 446 ஊரகப் பகுதியைச் சார்த்திருக்கிற நூலகத்தில் இன்றைக்கு 3rd grade நூலகங்களாக கொண்டுவந்து, அவர்களுக்கான பணிநியமனம் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு மிகவும் உறுதுணையாக இருந்த நம்முடைய நிதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஸ்மார்ட் வகுப்புகள்!**

இப்படி ஒவ்வொன்றும் துறை சார்ந்து எங்களுடைய பள்ளி elementary school-ல் நீங்கள் உள்ளே நுழையும்போது BALA painting-Building as learning aid என்று சொல்கிறோம். அங்கு உள்ளே நுழையும் போது வரைந்திருக்கிற விஷயத்திலே பார்த்தீர்களென்றால், ABCD இருக்கின்றது. அ, ஆ இருக்கின்றது. கணக்கு வாய்ப்பாடு இருக்கின்றது. புத்தகத்தை நீங்கள் பையிலிருந்து எடுப்பதற்கு முன்னாடி அதைப்பார்த்து தெரிந்து கொள்கின்ற அளவிற்கு ஒரு பிள்ளைகள் நுழையும்போதிருந்தே நாங்கள் இன்றைக்கு கொண்டுவந்திருக்கின்றோம். அதுமட்டுமல்ல Manarkeni என்கின்ற App மூலமாக இன்றைக்கு செய்முறை மூலமாக ஒவ்வொரு teachers-ம் 2D, 3D dimension மூலமாக ஒரு theorem-ஐ விளக்குவது எப்படி, ஒரு law எப்படி செயல்படுகிறது, ஒரு STEM lab-க்கு அடுத்தபடியாக இது எப்படி செயல்படுகிறது என்பதைக் கொண்டுசெல்லும் அந்தப் பணியில் நாங்கள் ஈடுபடுகிறோம். இதைத் தொடங்கி வைத்தவர் யாரென்று சொன்னால், United Nations UNO-லிருந்து வந்திருக்கக்கூடிய அதனுடைய துணை பொதுச் செயலாளர் Thiru. Ibrahim Thiaw என்பவர்தான். தாம்பரத்திலே நாங்கள் அதைத் தொடங்கி வைத்திருக்கின்றோம்.

இப்படி அதுமட்டுமல்ல; அந்தப் பள்ளிக்கூடத்தைச் சார்ந்து இருக்கின்ற இன்றைக்கு உறுப்பினர் சா. மாங்குடி அவர்கள் பேசும்போதுகூட, hitech lab மேல்நிலைப் பள்ளிக்கு வேண்டுமென்று கேட்டார்கள். ஏற்கெனவே பார்த்தீர்களென்றால், உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளியில் இந்த hitech lab கொண்டுவந்திருக்கிறோம். இப்பொழுது முழுமையாக எல்லா middle school-ம் கொண்டுவரவேண்டுமென்று இன்றைக்கு நாங்கள் அதை செய்து கொண்டிருக்கின்றோம். அதுமட்டுமல்ல, smart வகுப்பு எப்படி ஒவ்வொரு MLA's-ம் அதற்கு contribute செய்கிறீர்களோ, அதே போன்று smart வகுப்பைப் பொறுத்தவரைக்கும் 22,931 பள்ளிக்கூடங்களிலும் கொண்டுவருவதற்கு நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் எங்களை பணித்திருக்கிறார்கள்.

**பேராசிரியர் மேம்பாட்டுத் திட்டம்!**

அதற்காக ஏறத்தாழ 520 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 20,856 பள்ளிக்கூடங்களில் நாங்கள் செய்யவிருக்கின்றோம். கட்டிடங்கள் என்ற வரும்போது, நம்முடைய பேராசிரியர் மேம்பாட்டு திட்டம் என்கின்ற விதத்தில், 7500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. அதற்கு நான் பதிலுரையில் சொன்னமாதிரிதான் 3500 வகுப்பறைகள் திறக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அடுத்தகட்டமாக ஒரு 4829 வகுப்பறைளுக்கு இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியிலிருந்து அது கட்டப்படும். இந்த வகுப்பறை என்று வரும்போது, இதில் கழிவறைகளும் வந்துவிடுகிறது, சுற்றுச்சுவரும் வந்துவிடுகிறது, ஆய்வகங்களும் வந்துவிடுகிறது. ஆக ஒரு பள்ளிக்கூடத்திற்கு என்ன தேவையோ அவை முழுமையும் வருகின்ற அளவிற்கு இதை நாங்கள் செய்துகொண்டிருக்கின்றோம். அதுமட்டுமல்ல; இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் மீதிருக்கின்ற நம்பிக்கை, இந்த அரசாங்கத்தின்மீது இருக்கின்ற நம்பிக்கை, CSR activity கடந்த நவம்பர் மாதம் 2022 அன்று தொடங்கினோம். அதை தொடங்கும்போதுகூட முதன்முதலாக எப்படி தொடங்கினார்கள் என்று சொன்னால், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய சொந்தப் பணம் ரூபாய் 5 இலட்சம் வழங்கிதான் அதைத் தொடங்கி வைத்திருக்கின்றார்.

**‘விழுதுகள்’ திட்டத்தில் 7 லட்சம் பேர் பாதிப்பு!**

இன்றைக்கு இந்த அரசாங்கத்தின்மீது தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையின் அடிப்படையிலே தன்னார்வலர்கள் வழங்கிய நிதி மட்டும் ஏறத்தாழ 321 கோடியே 55 இலட்சம் ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) நம்மை தேடி வந்திருக்கிறது என்று சொல்லும்போது, இதை நாங்கள் இந்த department-ஐ எவ்வளவு serious ஆக கொண்டு போகிறோம் என்பதை உன்னிப்பாக அவர் கவனிக்கிறார். அதுமட்டுமல்ல, விழுதுகள் என்கின்ற ஓர் அமைப்பை நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அந்த விழுதுகள் is nothing but alumni-தான். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் படித்திருக்கின்ற முன்னாள் மாணவர்கள் வெளிநாட்டில் இருந்தாலும் சரி, வெளி மாநிலத்தில் இருந்தாலும் சரி நல்லவேலையில் இருந்தால் அவர்களுடைய பங்கு என்பது ஏறத்தாழ விழுதுகளை நாங்கள் ஆரம்பித்து, அதில் 7,03,908 பேர் பதிவு செய்து, இன்றைக்கு அவர்களுடைய சேவைகளையும் செய்துகொண்டிருக்கிறார்கள் என்னும்பொழுது, பள்ளிக் கல்வித் துறையின்மீது அவர்கள் வைத்திருக்கக் கூடிய நம்பிக்கையை இது காட்டுகின்றது. இதுமட்டுமல்ல இன்றைக்கு எல்லோரும் சொன்னமாதிரிதான் நம்முடைய ஐயா பேராசிரியர் அவர்களுடைய பெயரில் சிறந்த பள்ளிக்கூடத்திற்கான விருதுகளை நாங்கள் வழங்கியிருக்கின்றோம்.

**சிறந்த பள்ளிகளுக்கு ரூ. 10 லட்சம் - சான்றிதழ்!**

ஒவ்வொரு மாவட்டத்திற்கு இரண்டு பள்ளிக்கூடங்கள் தேர்ந்தேடுத்து, 76 பள்ளிக்கூடங்கள் நாங்கள் விருதுகளை வழங்கியிருக்கின்றோம். அதுமட்டுமல்ல, அண்ணா தலைமையத்துவ விருது என்கின்ற வகையில், ஒரு 100 தலைமையாசிரியர்களுக்கு எல்லா விதத்திலும் அது தொடக்கப்பள்ளியாக இருந்தாலும் சரி, நடுநிலைப் பள்ளியாக இருந்தாலும் சரி, High schools, Higher Secondary schools இருந்தாலும் சரி இதுமாதிரி 100 பள்ளிக்கூடங்களை நாங்கள் தேர்வுசெய்து, அதற்கு ஒவ்வொரு தலைமையாசிரியருக்கும் 10 இலட்சம் ரூபாய் அதனோடு சேர்த்து சான்றிதழ்கள், ஒரு award-ஐ நாங்கள் தனியாக பள்ளியின் மேம்பாட்டிற்காகத் தருகின்றோம்.

இதுமட்டுமல்ல, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், அதிகபடியாக எங்களிடம் இந்த மானியக் கோரிக்கைக்கு முன்பு கேட்டது, சிறுபான்மைச் சார்ந்தோருக்கான கூட்டம் நடத்த வேண்டுமே, 9 ஆம் தேதி ஒரு கூட்டமும், 17 ஆம் தேதி ஒரு கூட்டமும் நடத்துகின்றோமே-நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களான இனிகோ இருதயராஜ், முனைவர் எம். எச். ஜவாஹிருல்லா ஆகியோரைக் கொண்டு நடத்த வேண்டிய கூட்டம் என்னவாயிற்று என்று கேட்டார்கள். ஆக, அதில் வைத்திருக்கின்ற-குறிப்பாக, நம்முடைய அரசுப் பள்ளிக்கு நேரடி நியமனம் என்று வரும்போது பொதுப் பிரிவிற்கு 53 வயதும் மற்ற பிரிவினருக்கு 58 வயதும் என்று இருப்பதை போன்றே எங்களுக்கும் வேண்டுமென்று அவர்கள் கேட்டபோது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ஆவன செய்து தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் நாங்கள் இன்றைக்கு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**காலை உணவு திட்டம்! விரிவுபடுத்தப்படும்!**

Hi-Tech Lab-ஐ பொறுத்தவரைக்கும், அரசுப் பள்ளிகளுக்கு என்னென்ன சலுகைகள் வழங்குகின்றோமோ, அதை அரசு உதவிப்பெறும் பள்ளிகளுக்கும் தேவை என்று உறுப்பினர் முகம்மது ஷாநவாஸ் சொல்லியிருக்கின்றார்கள், அது அறிவிப்பிலும் வரவிருக்கிறது. ஏனென்றால், சிறுபான்மைப் பள்ளிகள் கேட்டது எங்களுக்கு Hi-Tech Lab, STEM Lab கொடுங்கள், எங்களையும் கலை விழா கொண்டாட்டத்தில் இணைத்துக் கொள்ளுங்கள் என்றெல்லாம் கேட்டபோது, இன்றைக்கு அதையும் செய்கின்ற அளவிற்கு நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, அரசுப் பள்ளியில் வழங்கும் காலை உணவுத் திட்டத்தையும் கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அதையும் இன்றைக்கு விரிவுபடுத்தியிருக்கிறார்கள். ஊரக பகுதியைச் சார்ந்திருக்கின்ற அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் உடனடியாக விரிவுபடுத்தப்படும். அதற்கான ஏற்பாடுகளும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேமாதிரி, post approval பற்றி கேட்டார்கள். இவ்வளவு வருடங்களாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்று கேட்டார்கள். அதற்கான guidelines-ஐ முதலமைச்சர் அவர்கள் வழங்க சொல்லியிருந்தார்கள்.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்